

#17-A, P.N.K. Garden 2nd Street, Mylapore. OFF : 2498 1293 CHENNAI
PRIYANKA MAGAZINES CIRCULATING LIBRARY #17-A, P.N.K. Garden 2nd Street, Mylapore Off. 9381542252 Cell 94444 92337 V. PARTHIPHAN CHENNAI - 4.

# எப்ஸம் எனும் ஊரிலே...

□முனைவர் து. உத்ரா

**பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி! இங்கிலாந்தின் ஒரு தூங்குமூஞ்சிக் கிராமம் எப்ஸம் (Epsom). அந்த ஊர்க்கோடியில் தெளிந்த நீருடன் ஓர் குட்டை. ஆடுமாடுகள் கூட அந்தக் குட்டை நீரைக் குடிக்காது. அவ்வளவு கசப்பான நீர்! நல்ல ஒரு கோடை நாளில், வேலையை முடித்துவிட்டு அந்த ஊர்வழியாகச் சென்ற சில தொழிலாளர்கள் அந்தக் குட்டைக்கு அருகில் ஓய்வெடுத்தார்கள். தாகம் தாளாமல் அந்த கசப்பு நீரைக் குடித்தார்கள். அந்தக் குட்டைக்கு வந்தது ராஜமரியாதை!**

அந்தக் குட்டையில் நீர் அருந்திய அந்தத் தொழிலாளர்களுக்கு, சாப்பிட்ட உணவு நன்றாகச் செரிமானம் ஆனது. அவர்களின் உடம்பே லேசானது போல் உணர்ந்தார்கள். அவர்கள் அந்த ஊரிலேயே ஒரு சில நாட்கள் தங்கினார்கள். அதில் ஒரு தொழிலாளி பல நாட்களாக தீராத வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்தான். எந்த மருந்தும் பயன் தரவில்லை. அந்தக் குளத்தின் கசப்பு நீரை குடித்தது முதல் வயிற்றுவலி நன்றாய் குறைந்திருந்தது. மேலும் சில நாட்கள் தங்கி, ஏறக்குறைய குணமாகியே விட்டான் அந்தத் தொழிலாளி!

லண்டன் நகர் செல்லும் வழியில், எப்ஸத்தில் தாங்கள் பருகிய அந்த சகப்பு நீரைப் பற்றி பார்த்தவர்களிடமெல்லாம் கதை கதையாய் கூறினார்கள். வயிற்று வலி தீர மக்கள் எப்ஸம் குளத்து நீரைப் பருக ஆரம்பித்தார்கள். இச்செய்தி மகாராணி எலிசபெத்தின் காதுகளுக்கும் எட்டியது. பின்னர், முதலாம் ஜேம்ஸ் மன்னர் காலத்தில், இந்தக் குளத்து நீரில் ஏதோ மருத்துவ குணம் உள்ளதென இங்கிலாந்தின் மருத்துவர்கள்கூட கருதினார்கள். எனவே, அந்தச் சின்ன கிராமத்தில் நோயாளிகள் தங்க சின்னச் சின்ன வீடுகள் கட்டப்பட்டன. குளத்தைச் சுற்றி சுவரும் எழுப்பப்பட்டது.

இதற்குப் பிறகு, எப்ஸத்தின் நீர், 'விண்ணுலகத்திலிருந்து வந்த அதிசய நீர்' என்ற திடீர் அந்தஸ்து பெற்றது. முதலாம் சர் சார்லஸ் மன்னரின் மாமியார் மரியா டெ மெடிஸி (Maria de Medici), இந்த 'சக்தி வாய்ந்த' நீரைப் பருக அவ்வப்போது எப்ஸம் வந்து தங்கினார். அவரைப் பார்த்து அரச குடும்பத்தின் பலரும் எப்ஸம் போய் வருவதை பெருமையாகக் கருதினார்கள். பதினேழாம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் 'எப்ஸம்' என்பதே ஒரு நாகரிகச் சொல்லானது. அங்கு அந்த ஊரில் கலை அரங்கங்கள் கட்டப்பட்டன. கேளிக்கை விழாக்கள் ஓயாமல் நடந்தன. ஒன்றுமே இல்லாத கிராமம். பெரிய பெரிய தெருக்கள் போடப்பட்ட நகரமாக மாறியது. பணக்காரர்களும், பெரும் வணிகர்களும் தங்குமிடமாக ஆனது எப்ஸம். தங்க இடம் போதாத அளவுக்கு அலைமோதியது மக்கள் கூட்டம்.

குளத்து நீரைப் பருகவந்த செல்வந்தர்களுக்கு விருந்து சமைக்க, அடுப்புகள் எரிந்த வண்ணம்



இருந்தன. உணவு உண்டபின், அவர்கள் பொழுதுபோக்க குத்துச் சண்டை, மல்யுத்தம், சீட்டுக் கச்சேரி, பாட்டுக் கச்சேரி, நடனக் காட்சிகள் இப்படி நாள்தோறும் திருவிழாவாக மாறியது அந்தக் குட்டியூண்டு சிற்றூர் எப்ஸம். அந்த ஊருக்கு வந்த கனவான்கள், தங்கள் குதிரைகளுக்கிடையே போட்டி நடத்தினார்கள். இதுவே, பந்தயமாக மாறியது. 1780-ம் ஆண்டு நடந்த டெர்பி (Derby) குதிரைப் பந்தயமும், அதற்கடுத்த ஆண்டு நடந்த ஓக்ஸ் குதிரைப் பந்தயமும் குறிப்பிடத்தக்கவை.

அங்கு வந்து தங்கமுடியாத பல பணக்காரர்கள், மிக அதிக விலை கொடுத்து எப்ஸம் குளத்து நீரை தருவித்துக் குடித்தார்கள். பின்னர், இது பெரிய வியாபாரமாக மாறியது. கொஞ்ச காலம் கழித்து, நீரை விற்பதற்கு பதிலாக, அதனை ஆவியாக்கி, அதில் தங்கிய உப்பைப் பிரித்தெடுத்தார்கள். இந்த உப்பினால்தான் நீருக்கு மருத்துவ குணம் கிடைத்தது எனவும் கண்டுபிடித்தார்கள். அடுத்தது என்ன? இந்த உப்பை ஏக விலைக்கு விற்றார்கள். இதையும் வாங்க, பல பணக்காரர்கள் போட்டி போட்டுக் கொண்டு நின்றார்கள்!

**அந்தக் குட்டையில் நீர் அருந்திய அந்தத் தொழிலாளர்களுக்கு, சாப்பிட்ட உணவு நன்றாகச் செரிமானம் ஆனது. அவர்களின் உடம்பே லேசானது போல் உணர்ந்தார்கள்.**

இறுதியில், இந்த உப்பு மெக்னீஸியம் ஸல்பேட் என்று கண்டுபிடிக்கப்பட்டது. வேதியியல் தனிப்பெரும் அறிவியலாக உருவாகிக் கொண்டிருந்த சமயம் அது. எனவே, இத்தனை குணம் வாய்ந்த இந்த உப்பை வேதியியல் கூடத்திலேயே உருவாக்க முடியுமா என பல அறிஞர்கள் முனைந்தார்கள். வழியும் பிறந்தது! சில தொழிலதிபர்கள் இந்த உப்பை உற்பத்தி செய்து விற்றார்கள். மெக்னீஸியம் சல்பேட் விற்பனைக்கு வந்த பிறகு எப்ஸம் நகருக்கு உப்பைத் தேடி மக்கள் வருவது மெதுவாகக் குறையத் தொடங்கியது. ஆட்டமும், பாட்டும் அடங்கின. எல்லா வசதிகளும் இருந்தும், ஆனால் விருந்தினர்கள் இல்லாமல் வெறிச்சோடிப் போனது எப்ஸம்! மெக்னீஸியம் சல்பேட் விற்பனைக்கு வந்த பிறகு, எப்ஸம் என்றே இன்றளவும் விற்கப்படுகிறது. வயிற்றுக் கோளாறுகள் நீங்க இப்போதும் பல மருந்துகளில் இது பயன்படுத்தப்படுகிறது. பகட்டால் பெயர் எடுக்காமல் போனாலும், வயிற்று நோய் போக்கும் குணத்தால், எப்ஸம் இன்றளவும் நம்மிடையே நிலைத்துவிட்டது!